**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி**

**முன்னிலை : திருமதி. கா. பாரதி , M.L.,**

**கூடுதல் சார்பு நீதிபதி,**

**பழனி.**

**2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09 ஆம் நாள் புதன்கிழமை**

**இ.ம.எண்.7/2024**

**இன்**

**அ.வ.எண்.117/2009**

1. M. தேவி

2. M. கீதா --- மனுதாரர்கள்/3, 4 பிரதிவாதிகள்

/எதிர்/

1. R. சாந்தி

2. R. சுஜிதா --- 1, 2 எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

3. M. திலகம் --- 3-ம் எதிர்மனுதாரர்/2-ம் பிரதிவாதி

(இ.ம.எண்.8/2025-ல் கடந்த 13.02.2025 ஆம் தேதி
பிறப்பித்த உத்தரவின்படி 3-ம் எதிர்மனுதாரர்/3-ம் வாதி
தரப்பினராகச் சேர்க்கப்பட்டு, இ.ம.எண்.9/2025-ல்
கடந்த 05.03.2025 ஆம் தேதி பிறப்பித்த உத்தரவின்படி
மனு திருத்தம் செய்யப்பட்டுள்ளது)

இந்த மனுவானது 12.03.2025 ஆம் தேதியன்று என் முன்னர் இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர்கள்/3, 4 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் N. முத்துக்குமார் அவர்கள் முன்னிலையாகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் S.கொளந்தசாமி அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

மனுதாரர்கள்/3, 4 பிரதிவாதிகளுக்கு எதிராக 10.03.2017 ஆம் தேதி பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய உத்தரவிடக்கோரி

உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் ஆணை 9 விதி 7–ன்படி மனுதாரர்கள்/3, 4 பிரதிவாதிகளால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர்கள்/3, 4 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டின் சுருக்கம்:–**

மனுதாரர்கள் அசல் வழக்கின் 3 மற்றும் 4 பிரதிவாதிகள். அசல் வழக்கானது 3 மற்றும் 4 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்காக 10.03.2017 அன்று வாய்தாவிற்கு இருந்த நிலையில், 1–ம் மனுதாரருக்கு 2001 ஆம் ஆண்டு முதல் இருந்த கர்ப்பப்பை பிரச்சனை காரணமாக 04.12.2023 அன்று கருப்பை நீக்கம் செய்ய சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதியாகியுள்ளார். 05.12.2023 அன்று அறுவை சிகிச்சை நடந்துள்ள நிலையில், 07.12.2023 அன்று மருத்துவமனையில் இருந்து 1–ம் மனுதாரர் விடுவிக்கப்பட்டுள்ளார். 2–ம் மனுதாரர், 1–ம் மனுதாரருக்கு உதவியாக இருந்து வந்த நிலையில், வழக்கறிஞரை சந்தித்து வழக்கு குறித்து கேட்க இயலவில்லை. எனவே எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தால், 10.03.2017 அன்று 3 மற்றும் 4 எதிர்மனுதாரர்கள் தோன்றாத்தரப்பினர்களாக கருதப்பட்டுள்ளனர். எனவே மேற்படி ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவிடவேண்டும்.

**3. 1–ம் எதிர்மனுதாரர்/1–ம் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்உரையின் சுருக்கம் பின்வருமாறு:–**

மனுதாரரின் மனு பொய்யானது, நிலைநிற்கத்தக்கதல்ல. வழக்கானது 15 ஆண்டு காலமாக நிலுவையில் இருந்து வருகிறது. வழக்கானது பிரதிவாதிகள் தரப்பில் இதர சாட்சிகளுக்காக நிலுவையில் உள்ள நிலையில், இவ்வாறான மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2–ம் பிரதிவாதி, மனுதாரரின் தாயார் ஆவார். வழக்கு சங்கதிகள் குறித்து மனுதாரர்களுக்கு நன்கு தெரியும். 2–ம் பிரதிவாதியுடன் கூட்டுச் சேர்ந்துகொண்டு மனுதாரர்கள் தாமதமாகத் தாக்கல் செய்துள்ள இம்மனு தள்ளுபடியாக வேண்டும். 2–ம் பிரதிவாதியானவர் தனது வழக்கிற்குத் தேவையான விடுபட்ட சங்கதிகளை தன் மகள்களான 3 மற்றும் 4 பிரதிவாதிகளைக் கொண்டு நிரப்புவதற்காக இவ்வாறான மனுவைத் தாக்கல் செய்துள்ளார். கருப்பை சம்மந்தமான சிகிச்சைக்காக 2001 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை யாரும் காத்திருக்க மாட்டார்கள்.

அவ்வாறான சங்கதிக்கு ஆதரவாக எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை. மனுவில் கூறியுள்ள காரணங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. மனு தள்ளுபடியாக வேண்டும்.

4. இந்த மனுவில் இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியங்கள் விசாரிக்கப்படவில்லை. இருதரப்பிலும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5. இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவென்றால், இந்த மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

<u>6. தீர்வு:–</u>

6.1. மனு, எதிர்உரை மற்றும் வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர்கள் தரப்பில் 1–ம் மனுதாரர் 2001 ஆம் ஆண்டு முதல் கருப்பை பிரச்சனையால் பாதிக்கப்பட்டிருந்ததாகவும், 04.12.2023 அன்று கருப்பையானது அறுவை சிகிச்சை மூலம் நீக்கம் செய்வதற்காக கோயம்புத்தூர் தனியார் மருத்துவமனையில் 1–ம் மனுதாரர் அனுமதியானதாகவும், 2–ம் மனுதாரர், 1–ம் மனுதாரருக்குத் துணையாக இருந்ததாகவும், 10.03.2017 அன்று எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தால் மனுதாரர்கள் தோன்றாத்தரப்பினர்களாக உள்ள நிலையில் வழக்கறிஞரை சந்தித்து வழக்கு நடத்த இயலவில்லை என்றும் தெரிவித்து ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய வாதிடப்பட்டது.

6.2. எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் அசல் வழக்கானது 15 ஆண்டுகாலமாக நிலுவையில் இருந்து வருவதாகவும், மனுதாரர்கள் தரப்பில் மருத்துவ ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், அசல் வழக்கானது பிரதிவாதிகள் தரப்பு இதர சாட்சிகளுக்காக நிலுவையில் இருந்த வந்த நிலையில், மனுதாரர்களின் தாயாரான 2–ம் பிரதிவாதி தனது மகள்களுடன் கூட்டுச் சேர்ந்துகொண்டு இவ்வாறான மனுவைத் தாக்கல் செய்து வழக்கை காலதாமதப்படுத்துவதாகத் தெரிவித்து வாதிடப்பட்டது.

6.3….. 2001 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை 1–ம் மனுதாரர் கருப்பை பிரச்சனையால் பாதிக்கப்பட்டதாகச் சொல்வதற்கு எவ்வித ஆவணமும் மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. ஒருவேளை 1–ம் மனுதாரர் 2023

ஆம் வருடம் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதியானதாக எடுத்துக்கொண்டாலும், 2017 ஆம் ஆண்டு முதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் இருந்துள்ளதற்கு மேற்படி காரணம் போதுமானதல்ல. அதிலும் குறிப்பாக 2–ம் மனுதாரர் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் இருந்துள்ளதற்கு கூறும் காரணம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல.

6.4. இருதரப்பு வாதங்களையும் பரிசீலித்த பின்பு வழங்கப்படும் நீதி முறையானதாக இருக்கும் என்பதால், மனுதாரர்களுக்கு வழக்கை நடத்த நிபந்தனையின் அடிப்படையில் வாய்ப்பு வழங்கலாம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

7. இறுதியாக இம்மனு அனுமதிக்கப்பட்டு, 1, 2 மனுதாரர்கள்/3, 4 பிரதிவாதிகள், 1, 2 எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு ரூ.5,000/–ஐ வருகின்ற 24.04.2025 ஆம் தேதிக்குள் செலுத்தும்பட்சத்தில் இம்மனு அனுதிக்கப்படும் என்றும், தவறும்பட்சத்தில் இம்மனு தானாகவே தள்ளுபடி ஆகும் என்றும் உத்தரவிடப்படுகிறது. அழைக்க வாய்தா : 25.04.2025.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் ஒப்பெழுதப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09 ஆம் நாளாகிய இன்று பகரப்பட்டது.

K BHARATHI
Digitally signed by K BHARATHI
Date: 2025.04.16 18:19:04 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
பழனி.

மனுதாரர்கள்/3, 4 பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் : இல்லை

1, 2 எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் : இல்லை

K BHARATHI
Digitally signed by K BHARATHI
Date: 2025.04.16 18:19:12 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
பழனி.